பலவான்குடி

அஞ்சாத பெருமாள்

ஸ்ரீ செங்கமல அம்மன்
செந்தமிழ் அந்தாதி

பாவாக்கம்:

பலவான்குடிப் புலவர்

வே. வேலப்பன்,

பி. ஓ. எல்., பி. டி., பி. லிட்., எம். ஏ.,

(தமிழ் & ஆங்கிலம்)

வெளியீடும் - அன்பளிப்பும்:

பெரி. மீ. சுந்தரன்,

பலவான்குடி.

ஸ்ரீ அபிராமி ● தேவகோட்டை.

உ

சிவமயம்

பலவான்குடி

அஞ்சாத பெருமாள்

ஸ்ரீ செங்கமல அம்மன்

செந்தமிழ் அந்தாதி

பாவாக்கம்:

பலவான்குடிப் புலவர்

வே. வேலப்பன்,

பி. ஓ. எல்., பி. டி., பி. லிட்.,

(எம். ஏ., தமிழ் & ஆங்கிலம்)

(முன்னாள்) பேராசிரியர்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

இந்நாள் முதல்வர், C. T. C. காரைக்குடி.

வெளியீடும் – அன்பளிப்பும்:

பெரி. மீ. சுந்தரன்,

பலவான்குடி.

ரௌத்ரி ○ சித்திரை ○ 16. 28—4—1980

உ

சிவமயம்



பொங்கும் நலமெல்லாம் பூவுலகில் வாழ்வார்க்குத்
தங்கும் படியருளும் தாயான செங்கமலம்
நெல்லாகத் தோன்றிநன் நீராகப் பாய்ந்துவந்து
பல்லாண்டு காப்பாள் பரிந்து.

மங்கலம் பொங்க மனமார வேண்டின்நம்
செங்கமலம் காப்பாள் சிறந்து.



அஞ்சாத பெருமாள்
ஸ்ரீ செங்கமல அம்மன்
பலவான்குடி.

இந்த வெளியீடு ○ ○ ○ ○ ○ ○

என் தாயார் கலியாணி ஆச்சி,
தந்தையார் இளையபெருமாள் செட்டியார்
(பெரிய கருப்பன் செட்டியார் என்ற
லெட்சுமணன் செட்டியார்)
இருவரின் நினைவாக

என் தமையனார்கள்:

1. ராம. கும. சு. குமரப்ப செட்டியார்.,
2. ராம. கு. ராம, குமரப்ப செட்டியார்.,
3. ராம. கும. பெரி. குமரப்ப செட்டியார்

மூவர்க்கும் காணிக்கை.

என்னுரை..................!

என் அருமைத் தாய், தந்தை - இருவர்க்கும் ஸ்ரீ செங்கமல அம்மனிடம் இருந்து வந்த அளவற்ற பக்தி என் ரத்தத்துடன் கலந்து, இளமை தொட்டு வளர்ந்து, பொங்கிப் பெருக் கெடுத்து நிற்கிறது.

புலவர். வே. வேலப்பன் அவர்கள் கும்பாபிடேக அழைப் பிதழுக்கு இயற்றித் தந்த "பொங்கும் நலம் எல்லாம்" என்றும் 'மங்கலம் பொங்க' என்றும் தொடங்கும் இரு பாடல்களும் எனக்கு மிகவும்பிடித்தமான, கைவிட்டு எண்ணக் கூடிய உள்ளம் கவர் பாட்டுக்களில் சில.

"அபிராமி அந்தாதி" "கந்தர் அநுபூதி" "கந்தர் அலங்காரம்" பாடல்கள் அனைத்தும் எனக்கு மனப்பாடம். அப்படி இருந்தும் உடல் சோர்வு; உளச் சோர்வு ஏற்படும் போதெல்லாம் எனக்கு அச் சோர்வுகளைப் போக்கும் அருமருந்தாய்ப், "பொங்கும் நல மெல்லாம்" என்ற பாட்டு விளங்கி வருகின்றது.

என் நண்பர்களுக்கும் பிள்ளைகளுக்கும் எழுதும் கடிதங்களை அந்தப் பாட்டுடனேயே ஆரம்பிக்கின்றேன்.

அந்தப் பாட்டில் எனக்கு இருந்து வந்த ஈடுபாடு காரணமாய்ப் புலவர்.வேலப்பன் அவர்களை ஸ்ரீ செங்கமல அம்மன் அந்தாதி இயற்றித் தர வேண்டி னேன். அவர்களும் அன்புடன் இசைந்தார்கள்.

இந்நூலுடன், அன்னார் எல்லாரும் போற்றிப் புகழ்ந்து அருச்சனை வழிபாடு செய்யும் வண்ணம் 108 போற்றி களையும் இயற்றித் தந்துள்ளார்கள்.

அவற்றில் நாம் காணும் உலகெங்கும் நமைக் காக்கும் உமை சக்தி வடிவங்களாய்ச் செங்கமல அம்மனே திருவுருக் கொண்டு விளங்குகின்ருள் விரும்பி வந்து வணங்கி வழிபடும் அன்பர்களுக்கு நலம் எல்லாம் இணங்கி நெருங்கி வருமாறு அருளுகின்ருள் என்பதை ஓதி உணர்ந்து உய்யும் பொருட்டு ' நம் நகரத்தார்களின் 9 நகரக்கோவில்களிலும்" பிற நல்லூர்களிலும் எழுந்தருளி இருக்கின்ற அம்மையரையும் செம்மையுடன் போற்றி எழுதி உதவியுள்ளார்கள்.

அவர்களுக்கு நம் செங்கமல அம்மன் நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் நல்குவாள் ஆகுக! என வாழ்த்தி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து மகிழ்கின்றேன். ஸ்ரீ செங்கமல அம்மன் மீது முதன் முதலாக எழுதப்பட்டு வெளிவரும் அவர்களின் இந் நன்னூல் எனக்கு மட்டுமல்லாமல் நம் எல்லோருக்கும் பயன் படவேண்டும். செங்கமல நாயகியின் திருவருள் எல்லாருக்கும் கிட்டவேண்டும் என்ற நல் ஆசையால் என்றன் உள்ளம் விரும்பி இதைப் பதிப்பிக்கச் செய்து அன்பளிப்பாய் வழங்குவதில் பெருமைப் படுகின்றேன்.

ஸ்ரீ செங்கமல அம்மன் நிழற்படம் எடுத்து உதவிய திரு. கும. வள்ளியப்பன் (உரிமையாளர் - குமார் ஃளாஷ் போட்டோ சர்வீஸ் திருச்சி) அவர்களுக்கும், அழகுற உரிய காலத்தில் அச்சிட்டு உதவிய தேவகோட்டை அபிராமி அச்சகத்தார்க்கும், இந்நூலினை எளிமை, இனிமை ஆழம் உடைமை என்னும் உயர் கவிதைப் பண்புகள் மூன்றனுங் குஉரிய சான்ருக இன்னிசை, நேரிசை வெண் பாக்களால் இயற்றி உதவியதோடு அல்லாமல், இது நல்ல முறையில் வெளிவர எல்லா வகையாலும் உறவு சொல்லும் ஒருவனுக வெளிப்பட்டு உறுதுணை புரிந்த புலவர் திரு. வே. வேலப்பன். பி. ஒ. எல். பி. டி. பி. லிட் (M. A)

அவர்களுக்கும் எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கின் முத்தமிழ்ப் பெருங்கவிஞர் இந்நூலிற்கு ஏற்றமிகு,தோற்றமுடன் அருமையானதொரு அணிந்துரை வழங்கி உதவிய அன்பர் உயர் திரு. அரு. சோமசுந்தரனார் M.A.B.T· அவர்களுக்கும் இந்நூலை நன்ருக ஆய்வுணர்வோடு முழுமையும் படித்தறிந்து உள்ளம் மகிழ்ந்து உணர்வோடு ''தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'' என்ற திருக்குறள் வரி காட்டும் நெறியில் நின்று ''அறிமுக உரை'' எழுதி உதவிய காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் பேராசிரியர் புலவர் தெ. முருகசாமி M. A. B. O. L. அவர்களுக்கும் எங்கள் இல்லத்தார் எல்லோரின் சார்பாகவும் உள்ளார்ந்த நன்றி யறிதலை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

பலவான்குடி ராம. கும. பெரி,

மீனுட்சிசுந்தரன்,

''செங்கமலம்''

31. சுப்பிரமணியபுரம் வீதி

தேவகோட்டை - 623302

இராமநாதபுரம் (மா. வ)

"கவிஞர் கோ", "பல்துறை செந்நாப் பாவலர்"
"உலகம் சுற்றும் பொற்கிழிக் கவிஞர்"

உயர்திரு அரு. சோமசுந்தரன், M.A., B.T.,
(உரிமையாளர், பொன்முடிப் பதிப்பகம்)
123, முத்துப்பட்டணம் மூன்றும் தெரு,
காரைக்குடி.
(இராமநாதபுரம் மாவட்டம்)

போன்: 824 தேதி: 11—4—1980

"அணிந்துரை"

அருமை நண்பர் திரு. புலவர் வேலப்பன் அவர்களின் செங்கமல அம்மன் செந்தமிழ் அந்தாதி நூல் முழுதும் அவர்களே இன்று பாடக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தேன்.

அவர்களின் சொந்த ஊரான பலவான் குடியில் எழுந்தருளியுள்ள "செங்கமல அம்மன்" மீது பற்றுேடும் பாசத்தோடும், பணிவோடும், துணிவோடும், ஊர் நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தி, உலக நிகழ்ச்சிகளை அகப் படுத்தி அற்புதமாகப் பாடி அம்மையை வசப்படுத்தி உள்ளார்.

நூலறிவும் நுண்ணறிவும் மிக்க புலவர் வேலப்பனின் கவிதை தங்கு நடையின்றிக் கங்கையாய்க் காவிரியாய் ஓடுகிறது.

இருபதாம் நூற்றுண்டில் எழுந்துள்ள அந்தாதிகளில் இது சிறப்பிடம் வகிக்கிறது எனலாம். அதற்குக் காரணம் இது வெண்பா அந்தாதி ஆகும்.

"பக்தி" யில் தோய்ந்து "புலவர்" பாடியுள்ள பாக்கள் என்னை மெய்மறக்கச் செய்தன.

"பலவான் குடிவாழும் பாவையவள் பார்வை
குலமான் பெருங்கருணை கூட்டும் நலவான்
படிகின்ற வண்ணம் படிக்கின்றுர் எண்ணம்
முடிகின்ற தால்போற்று முன்பு. 8

❋ ❋

"எனக்கினியாள் ஏழை எளியவர்க்கு என்றும்
மனக்கினியாள் வாசலுக்கு வந்தார் - தனக்கினியாள்
மீனுட்சி சுந்தரனுர் மேவும் அழகம்மை
தேனுட்சி கர்ண்பாள் தினம் 13

❋ ❋

"வணங்குவார்க்கு வேண்டுவன வாய்மையுடன் தூய்மை
இணங்குமாறு செய்யும் இயல்பு - மணங்கொண்ட
பூவாகி என்றும் பொருள்இன்பத் தேன் அறத்தில்
நாவாகி நிற்பாள் நயந்து" 19

முதலிய பாடல்கள் சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்

(உன்) "பாலாசை வைத்துள்ளேன் பார்"
"புண்ணியம் தாராய் புரிந்து"
"நீ தான் தருவாய் நெறி"
'நினைவைச் செயலாக்கு நீ"
- "வாழ்வுயரத் தாராய் வரம்
"பிறக்காமல் செய்பவளாம் பின்
"ஆட் கொண்டு நின்றால் அறம்"

முதலிய ஈற்றடிகள் அற்புதமானவை.

" புலவர்" பெரிதும் பாராட்டுதலுக்கு உரியவர். அவரது பணி சிறப்பானது.

நூல் வரைந்த புலவர் திரு. வேலப்பன் அவர்களையும், நூலை வெளியிடும் புரவலர் திரு. பெரி. மீனாட்சி சுந்தரனார் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அம்மையின் தாளுக்கு நூல் சமர்ப்பிக்கும் இருவர்க்கும் நாடு பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றது, அம்மை இருவருர்க்கும் அருள் புரிவது உறுதி.

புலவரின் வாக்குப்படி தாய் பரிசு தருவதும் உறுதி.

"பாட்டுக்குத் தாராய் பரிசு"

அன்புசால்

அரு. சோமசுந்தரன்.

" அறிமுக உரை "

பேராசிரியர் புலவர் தெ.முருகசாமி எம்.ஏ., பி.ஒ.எல்.,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி. திபி.2011 சித்திரை 1

பாராட்டி மகிழ்கின்றேன்:

திருவளரும் செட்டிநாட்டுப் பலவான்குடியில் வீற்றிருக்கும் அன்னை செங்கமல அம்மன்மீது பலவான்குடிப் பாவலர் மணி திரு. வே. வேலப்பனுர் பாடியுள்ள "செங்கமல அம்மன் செந்தமிழ் அந்தாதி" யைத் தமிழ்ப் புத்தாண்டாகிய இன்று (ரௌத்ரி) (13—4—1980) படித்துப் பயன்பெறும் பேறு பெற்றேன். நல்ல நாளில் நல்ல நூலொன்றிற்கு அறிமுக உரை எழுதும் மனநிறைவோடு இந்நூலை உருவாக்கக் காரணமாயிருந்த பலவான்குடியில் பிறந்து சிறந்து விளங்கும் உயர்திரு தேவகோட்டை பெரி. மீனுட்சி சுந்தரனுரின் தொண்டைப் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றேன்.

வாயாரப் போற்றி வழிபட வேண்டும்:

இறைவனை மனம், மொழி, மெய்களால் வழுத்துதல் வேண்டும். மனம் மெய்யினை விட மொழியால் வழுத்துதலே சாலச் சிறந்தது. இசையும் பொருள் உணர்ச்சியும் மொழியில் அமைந்துள்ளன. 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் கீழ்' என்ற மணிவாசகரின் மணிமொழிக்கிணங்க இறைவனை வாயாரப் போற்றி வழிபட வேண்டும். இவ்வழிபாட்டின் வெளிப்பாடாகத் தோன்றிய வையே சமயச்சான்ருேர்களின் பாடல்களாகும். இப்பாடல்கள் இறைவனை எளிதில் அனைவரும் பொருளுணர்ந்து ஓதுதற்கு ஆதாரமாகவும் இருக்கின்றன. இத்தகு வாழையடி வாழையாக வரும் உணர்வில் தோன்றிய தெய்வ நூல் வரிசையில் பலவான்குடி செங்கமல அம்மன் செந்தமிழ் அந்தாதியும் ஒன்ருகும்.

தெய்வப் பனுவல்:

இந்நூல் பாவால் உயர்ந்த வெண்பாவால் ஆனது. பாடல்கள் நேரிசை வெண்பாவாலும் "இன்னிசை வெண்பா வாலும் பாடப்பெற்றுள்ளன. நூலுள் சொற்செறிவும் சொல் லாட்சித் திறனும் நீரில் கெண்டைபோல் துள்ளுகின்றன. அணி இலக்கண உத்திகளும், திருவள்ளுவர், மாணிக்கவாசகர் போன்றோர்களின் மொழிப் பொருளும் செறிவுடன் கொண்ட இவ்வந்தாதி கற்போரைக் கவர வல்ல இலக்கியமாக உள்ளது. மேலும் செங்கமல அம்மன் மீது தெய்வ மணம் கமழும் தெய்வக் குறிப்புகளைப் பெரும்பாலும் வைத்துப் பாடியுள்ளதால் இரும்பு மனத்தை ஈர்த்தாள வல்ல வழிபாட்டிற்குரிய தெய்வப் பனுவ லாகவும் விளங்குகிறது.

அவையடக்கம்:

காப்புப் பாடி நூலைத் தொடங்குதல் முறையே யாயினும் இந்நூலாசிரியர் கற்பகவிநாயகர் காப்பிற்குப் பிறகு வேண்டுதல், தூண்டுதல், பணிதல், கனிதல், துணிதல் என்ற ஐந்தலைப் பாடல்களைப் புதுமைத் தலைப்பிட்டுப் பாடியுள்ளார். ஆசிரியர் அறிமுகப்படுத்திக் கொள்ளும் அவையடக்கத்திற்குரிய இடமாக இப்பாடல்கள் அமைந்துள்ளன எனலாம். இப் பாடல்கள் தம்முடையன என்று பதிகங்களின் ஈற்றில் ஞானசம்பந்தரும் ஆழ்வாராதிகளும் பாடிக் காட்டிய அரிதான வரலாற்றுக் குறிப்பைப் போல வேலப்பரும் தம் உள்ளிருப்பைப் பைந்தமிழ்ப் பாடல்கள் ஐந்தின் மூலம் காட்டியுள்ளது. முன்னோர் போக்கைத் தழுவியே பாடல் பாடிய அடக்க உணர்வைப் புலப்படுத்துகிறது.

நூல் முழுதும் அழகு:

நூலைத் தொடங்கும் அவையடக்கத்தில் 'மோனையுடன் பாடுவான் வேலப்பன்" II என்றபடி நூல்முழுவதும் மோனைத் தொடையில் அமைந்து அழகு தருகிறது. கரும்பின் அடிப்

பகுதியின் இனிப்பு – வெண்பாவின் ஈற்றடிக்கும் உண்டு. உதாரணமாக ‘அன்னைதான் யார்க்கும் அவள் (6) ‘நல்லறச் செங்கமலம் நாடு’ (9) ‘வண்மை அருள்வாள் வணங்கு’ (18) வாழ்வுயரத் தாராய் வரம் (43) ஒழுக்கமே வாழ்வின் உயிர் (71). பாலோடு தாராய் பழம் (79). செவியில் கவியுணர்வு சேர். (80) செல்வா விரைந்து நீ செல் (87) போன்ற பல ஈற்றடிகள் சிறப்பானவை.

ஔவையின் ஆத்திச்சூடி போல்:

ஈற்றடியுள் சில ஔவை மூதாட்டியின் ஆத்திச்சூடியைப் போல அமைந்துள்ளன. ‘அறம் செய்து வாழ்தல் அறிவு (62) ‘ஆற்றலைப் போற்றல் அறம் (63) இல்லறமாய் வாழ்தல் இனிது. (64) ஈகைதான் மார்ந்தர்க்கு இசை (65) என அகர வரிசையில் தொடர்ந்து 73ஆம் பாடல் வரை ஆத்திச்சூடியின் மரபைப் புதிய கோணத்தில் பாடிய ஆசிரியரின் புதுமையைக் கண்டு பாராட்டாமலிருக்க இயலாது பெரும்பாலான பாடல்களின் முதல் மூன்று வரிகளையும் நீக்கி ஈற்றடிகளை மட்டும் தொகுத்தால் அவைகள் நீதிஉரைகளாகவே நின்றிலங்கும் உண்மையையும் நன்று உணரலாம்.

புதுமையினும் புதுமை:

இறைவனிடம் அடியார்கள் வேண்டும் தரம் நூலுக்கு நூல் மாறுபடுவது இயல்பே. ஆனாலும் பாவலர்மணி வேலப்பர் இவ்வந்தாதியில் ஒன்று, இரண்டு, மூன்று எனப் பத்துவரை எண்ணிட்டுக் கேட்டு வேண்டுவது (89–98) புதுமையினும் புதுமையாக உள்ளது.

உவமைக் கவிஞர்:

அணிலொன்று வானுயர்ந்த ஆலமரம் பெற்ற, கனியெலாம் உண்ண முயற்காட்சி IV என்ற அவையடக்க உவமையும் ‘மத்தின் முனைவால் தயிரங்கு மோர்நெய் ஆதல் போல்’ (52) என்ற பாடல் உவமையும் சிறப்பாக உள்ளன.

எளிமையின் அருமைப்பாடு:

பொங்கும் நலமெல்லாம் பூவுலகில் வாழ்வார்க்குத்
தங்கும் படியருளும் தாயான — செங்கமலம்
நெல்லாகத் தோன்றிநன் னீராகப் பாய்ந்துவந்து
பல்லாண்டு காப்பாள் பரிந்து. (2)

என்ற பாடலும் 'ஊருத கேணிக்கும் ஊற்ருகி நாற்ருவாள்(37) என்ற பாடலும் செங்கமல அம்மனின் எளிமையின் அருமைப் பாட்டை வியந்து பாராட்டுகின்றன.

இனிமையின் பெருமைப்பாடு :

"இருப்பாவாள் துன்பச் செலவாவாள் இன்பம்
விருப்பாகும் வண்ணம் வரவின் — பொருப்பாவாள்(47)

என்ற இப்பாடலில் நடைமுறை உலகில் உள்ள வரவு, செலவு, இருப்பு என்ற மூன்று நிலையில் தேவியைச் சித்தரித்திருப்பது நினைத்து இன்புறத் தக்கதாயுள்ளது. அதிலும் துன்பச் செலவாவாள் என்பது கவிஞரின் இன்பத்தமிழிற்கோர் எடுத்துக் காட்டாம். இனிமையின் பெருமைப்பாடாம்,

சொல்லாட்சித் திறன்:

"உறைந்த மனக்கவலை" (22) 'திமிர்ந்த மெஞ்ஞானச் செருக்கு (30) 'வெண்மைப் புரட்சி' (51) தாங்கும் சுமை தாங்கி (76). நாளாண்மை (23) என்று வில்லைவிட்டுப் புறப்படும் அம்பைப் போலக் கவிஞரின் உள்ளத்திலிருந்து வீறிட்டெழுந்த தொடர்கள் இவ்வந்தாதியின் ஆழமான பொருள் தரும் சிறந்த சொல்லாட்சித் திறனுக்குத் தக்க எடுத்துக் காட்டாயுள்ளன.

வீறு தமிழால் வேண்டுகோள் :

கவிஞர் அம்மையை நூலுக்குள் அடக்கி விட்டதால் வீறுதமிழால் செம்மாப்புடன் சில வேண்டுகோளையும் விடுக்கிருர். நினைவைச் செயலாக்கு நீ (52) பிறக்காமல்

செய்பவளாம் பின் (54) பாட்டுக்குத் தாராய் பரிசு (61) இவற்றுள் "நீ என அம்மையை ஒருமையால் சுட்டுவது தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் தரத்தைப் புலப்படுத்துவதேயாகும்.

ஆய்வார்க்குத் துணை செய்யும்:

எந்நூலானாலும் அவ்வக் காலத்தின் வாழ்வியல் கருத்துக்கள் சமூக இயல்புகள் நூலுள் சுவடு கொள்வது இயல்பேயாகும். இருபதாம் நூற்றாண்டில் எழுந்த இவ் வந்தாதியில் பலவான்குடிவாழ் நகரப் பெருமக்களின் பண்பு சுற்றியுள்ள மக்களின் மன உணர்வு ஆகியவைகளையெல்லாம் நூலாசிரியர் சுட்டிச் செல்கிறார். இவைகள் கிராமிய வாழ்வை ஆயப்புகுவார்க்குத் துணை செய்யும் தடங்களாகும். மேலும் 'வாசலுக்கு வந்தார் தனக்கினியாள்' (13) 'வாழ்வரசி' (61) என்பன போன்றவை மன்பதை போற்றும் மாபெரும் செட்டி நாட்டுச் செந்தமிழ் என்பதையும் ஆய்வோர் அறிந்து இன்புறுவர்.

பொதுநலம் நோக்கம்:

இக்காலத்தில் கல்வி கற்போரின் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. ஒரு பாடல் (57) கிளர்ச்சி எனும் தூண்டிலில் கேடு என்ற மீனைப் பிடித்துக் கெட்டுப் போகும் மாணவ சமுதாயத்தைக் கட்டிக் காக்கக் கவிஞர் தேவியை வேண்டிக் கொள்வது கவிஞரின் பொதுநல நோக்கைக் காட்டுகிறது.

இப்படி எவ்வளவோ கூறலாம்

இப்படி எவ்வளவோ கூறலாம். அருச்சனை பாட்டே யாகும் என்பதை அறிந்து செந்தமிழ் அந்தாதியோடு செங்கமல அம்மன் நூற்றெட்டுப் போற்றிகளும் பாடித் தமிழ் அருச்சனைக்கு வழிகோலும் வகையில் நூல்களைப் பாடிய நூல் ஆசிரியர் என் மனக்கினிய நண்பர் பலவான்குடிப்,பாவலர்மணி **திரு. வே. வேலப்பனார்** 'மதி நுட்பம் நூலோடுடைய நுண்மாண்

நுழை புலம்மிக்கவர்' தோய்ந்த தமிழிலக்கியப் பயிற்சியாலும் ஆழ்ந்த உலகியல் அனுபவத்தாலும் இந்நூல்களைப் பாடியுள்ளார். 'பாட்டுக்குத் தாராய் பரிசு' (61) என்ற இந்நூலாசிரியரின் வேண்டுதலையே செங்கமல அம்மனுக்கும் வேண்டுகோளாய் விடுத்து இவ்வறிமுகஉரையை முடிக்கிறேன்

நன்றி, வணக்கம்.

'எல்லோரும் வாழ்க இனிது'

தெ. முருகசாமி
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

காரைக்குடி
13—4—80



உ

சிவமயம்

ஸ்ரீ செங்கமல அம்மன்
செந்தமிழ் அந்தாதி

காப்பு

1 திருவளரும் செம்மைத் திறம்வளரும் செஞ்சொற்
கருவளரும் காதற் கனியாய்த் — தருவளரும்
ஆதலால் கற்பகமே! ஆதி விநாயகனே!!
காதலால் கூப்புகிறேன் கை.

2 **வேண்டுதல்**

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்அம்பலவன்
ஞானகுரு வாணி திரு நாடுஎன – மோனையுடன்
பாடுவான் வேலப்பன் பாமாலை அந்தாதி
சூடுவாய் காப்பாய் துணிந்து.

தூண்டுதல்

3 பொங்கிடும் கங்கைப் புனிதன் வளரொளியான்
செங்கமல அம்மன்மேல் செந்தமிழ்அந் தாதிபாட
நன்கலமாய் வேலப்பன் நாவில் நடமாடி
மங்கலமாய் வாராய் மகிழ்ந்து.

பணிதல்

4 அணிலொன்று வானுயர்ந்த ஆலமரம் பெற்ற
கனியெல்லாம் உண்ணமுயற் காட்சி – இனிதான
சாட்சியாம் என்றன் தமிழ்தந்த தாய்மாலே
மாட்சியினைக் காஷ்மீர் மலர்ந்து.

கனிதல்

5 நன்றுடையான் தீயதிலான் நல்லதமிழ் வேலப்பன்
ஒன்றுன 'செங்கமலம்' ஓடிவந்து — நன்றநளக்
கன்னலொடு நெய்கலந்து காதற்சுவை கலந்தான்
என்னென்பேன் பாவின் எழில்.

துணிதல்

6 கற்பகத்தின் நற்கனியோ கற்பகத்தின் நற்கனியோ
கற்பகத்தின் பொற்பதமோ காவியமோ ஓவியமோ
பாமலரும் வேலப்பன் நாமலரும் அந்தாதிக்
காமலரும் செங்கமலப் பூ.

நூல்

1 அகரத்தார் உள்ளந்தான் ஆதிபரா சக்தி
மகரத்தார் வெள்ளந்தான் வைகை — நகரத்தார்
ஏற்றிடும் மங்கையர் குங்குமம் செங்கமலம்
போற்றிடும் கங்கையெனப் பொங்கு.

2 பொங்கும் நலமெல்லாம் பூவுலகில் வாழ்வார்க்குத்
தங்கும் படியருளும் தாயான — செங்கமலம்
நெல்லாகத் தோன்றிநன் நீராகப் பாய்ந்து(உ)வந்து
பல்லாண்டு காப்பாள் பரிந்து.

3 பரிந்திடும் தாயினும் பால்தருவாள் செம்மை
விரிந்திடும் வானினும் வேல்தருவாள் வெற்றி
புரிந்திடும் செந்தமிழ் வாள்தருவாள் என்றும்
அறிந்திடும் அன்னை அவள்.

4 அவளால் அவனும் அவனால் அவளும்
அவலால் மகிழ்ந்தான் அகமாய் முகமாகி
ஆவலாய் வேண்டி அவனடி வீழ்ந்தாரைக்
காவலாய்க் காப்பாள் கனிந்து

5 கனிந்தவர்க்குச் செந்தமிழ்வாய் காதல் அறத்தை
முனிந்தவர்க்கு வெந்தழல்பேய் முன்னம் பணிந்தவர்க்கோ
மன்றத்தில் வீற்றிருக்கும் மன்னுதி மன்னரென
இன்றெல்லாம் ஈவாள் இனிது.

6 இன்சொல் தமிழகமாய் ஏற்ற குமரப்பர்
முன்சென்று கும்பிட்ட நம்கோயில் செங்கமல
அன்னை குமர விநாயகர் ஆதலினால்
அன்னைதான் யார்க்கும் அவள்.

7 அவளன்றோ செங்கமலம் ஆயிரம் கண்ணால்
இவளன்றோ மங்கலம் ஈவாள் -- புகழ் ஒன்றோ
பொன்னே மணியே பொருளே அருள்தாயே
என்னே அவளின் பலம்.

8 பலவான் குடிவாழும் பாவை அவள்பார்வை
குலமான் பெருங்கருணை கூட்டும் — நலவான்
படிகின்ற வண்ணம் படிக்கின்றார் எண்ணம்
முடிகின்ற தாற்போற்று முன்பு.

9 முன்புறாஉம் ஊழ்வினையும் மூண்டபெரும் சூழ்வினையும்
துன்புறாஉம் ஆள்வினையும் தோன்றாவாம் - இன்புறாஉம்
இல்லற வாழ்வினை இன்புறச் செய்பவள்
நல்லறச் செங்கமலம் நாடு.

10 நாடெலாம் போற்றிடும் கல்வியும் செல்வமும்
ஏடெலாம் போற்றிடும் ஏற்றமும் — நாடலாம்
பாங்கான செங்கமலம் பாலான ஆலயம்
நீங்காமல் காண்பீர் நினைந்து.

11 நினைந்தவர் நெஞ்சமோ நேசமிகு பாசம்
புனைந்திங்கு வாழ்ந்திடும் போது — முனைந்தவர்
எங்கெங்கு சென்றாலும் யார்யாரைக் கண்டாலும்
செங்கமலம் காப்பாள் சிறந்து.

12 சிறந்தவள் தீமை மறந்தவள் செல்வம்
பிறந்தவள் தொண்டில்தன் னையே — துறந்தவள்
வல்லவனாய் நல்லவனாய் வாழ்வாங்கு வாழ்வதற்கு
எல்லாமே தந்தாள் எனக்கு.

13 எனக்கினியாள் ஏழை எளியவர்க்கு என்றும்
மனக்கினியாள், வாசலுக்கு வந்தார் — தனக்கினியாள்
மீனாட்சி சுந்தரனார் மேவும் அழகம்மை
தேனாட்சி காண்பாள் தினம்.

14 தினம் வந்து கும்பிடும் நம்பிடும் அன்பர்
மனம்வேலை கொள்வர் மகிழ்ந்து - தனம்வந்து
சோற்றால் மடையடைக்கும் சோழ வளநாடாய்க்
காற்றாகி வாழ்வர் கலந்து

15 கலந்துகாண் கண்களெனப் பெண்களுடன் ஆண்கள்
நலந்தங்கப் பாண்டியனார் ஆண்ட — நிலந்தான்
குலம்போற்றக் கூடிவந்து கும்பிட்டால் என்றும்
வலம்பெற்று வாழ்வர் வளர்ந்து

16 வளர்ந்துவரும் தேனிலவு மான் உலவும் கண்கள்
கிளர்ந்துவரும் பேரலைகள் கிதையவள் பாதை
மலர்ந்துவரும் பூச்செண்டில் வாழும்பொன் வண்டாம்
உலர்ந்திடும் நல்உப்புக் கல்.

17 கல்யாணம் ஆகாத கன்னியர்கள் செங்கமலக்
கல்யாணி வேண்டித்தம் கைதொழுதால் — கல்யாணம்
எண்ணம்போல் முன்னம் எளிதில் நிறைவேறும்
வண்ணமகள் ஈவாள் மனம்.

18 மனம்போல மாங்கல்யம் நல்ல மகனுல்
தினம்சால இன்பம் திகழ்வர் — அனம்போல
வெண்மை பசிதீர்க்கும் உண்மை உதவுகின்ற
வண்மை அருள்வாள் வணங்கு.

9 வணங்குவார்க்கு வேண்டுவன வாய்மையுடன் தூய்மை
இணங்குமாறு செய்யும் இயல்பு — மணங்கொண்ட
பூவாகி என்றும் பொருளின்பத் தேனறத்தில்
நாவாகி நிற்பாள் நயந்து.

20 நயந்திடச் செய்வாள் நலமெல்லாம் தீயார்
பயந்திடச் செய்வாள் பராசக்தி — வியந்திட
நன்றி உணர்வோடும் நல்லார் புணர்வோடும்
ஒன்றிவாழ வைப்பாள் உயர்ந்து.

21 உயர்ந்த மனிதரென்றும் ஊரின் புனிதர்
அயர்ந்தவர்க்குத் தெய்வம்அவள் தானே வியர்ந்தவர்கள்
பாலோடு பன்னிர் அபிடேகம் செய்வார்க்கு
வேலோடு நிற்பாள் விரைந்து.

22 விரைந்து திரிசூலம் வெல்லும் பகை கொல்லும்
நிறைந்து ஒளி வீசுமணி நேசம் — உறைந்த
மனக்கவலை தீர்க்கும் மதியின்பம் சேர்க்கும்
தனக்குவமை இல்லாதாள் தாள்.

23 தாளாண்மை கூட்டுவதும் தன்மானம் ஊட்டுவஃதும்
வாளாண்மை நாட்டுவதும் வண்ணத்தேர் ஓட்டுவதும்
நாளாண்மை காட்டுவதும் நம்மவளின் பண்பு அதனுல்
தாளாண்மை இல்லாரைத் தள்ளு.

24 தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வதனைக்
கொள்ளாத செல்வரும் வீரரும் — எள்ளாது
கூடி வரும்படியும் கோடி பெறும்படியும்
நாடி வரம்தருவாள் நன்கு.

25 நல்ல நகரத்தார் நாளும் திருப்பணிகள்
வல்லவராய்ச் செய்து வளர்ந்துவரப் — பல்லவராய்
கல்லாண்ட செம்மைக் கலைபோலப் பல்லாண்டு
இல்லாண்டு காப்பாய் இனிது.

26 இனிய தமிழாய் எவர்க்கும் அமிழ்தாய்க்
கனியாஅய் ஊருணியாய்க் காதற் — பனிமலையாய்க்
கங்கையாய்க் காவிரியாய்க் காலமெலாம் பாலமெனச்
செங்கமலம் காப்பாள் செறிந்து.

27 செங்கை அருள்நல்கும் செங்கண் பொருள்நல்கும்
தங்கையுடன் தம்பியர்க்கும் தாயாவாள் செங்கமலம்
குங்குமம் வெண்ணீறு கூடும் சிவனுமையாள்
மங்கலம் ஈவாள் மகிழ்ந்து.

28 மகிழ்ந்திட வாழ்வில் மதியும் நிதியும்
புகழ்ந்திடும் பண்புமிகப் போற்றும் சதிபதியாய்
எல்லாரும் இன்புற் றிருக்க நினைக்கின்ற
நல்லாரைக் காண்பதுவும் நன்று.

29 நல்லறம் செய்யும் நகரத்தார் நாடுகின்ற
இல்லறம் காக்கும் எழிலுடையார் — வில்லறமாய்ச்
சொல்லறம் காக்கும் புலவர் உழவர்உடன்
நெல்லறம் காப்பாய் நிறைந்து.

30 நிமிர்ந்த பழநி மலைமேலே நெஞ்சம்
திமிர்ந்தமெஞ் ஞானச் செருக்கால் இருக்கின்ற
கண்ணியம் மிக்கவனின் கைவேலாய்த் தான்இருக்கும்
புண்ணியம் தாராய் புரிந்து.

31 புல்லாய்ப் புழுவாய் விலங்காய் மனிதராய்
எல்லாமாய்த்தோற்றுவித்தஏந்திழையே—பல்லாண்டாய்ச்
சோதனைமேற் சோதனைதான் தோன்றுமல் முன்வந்து
வேதனையைத் தீர்ப்பாய் விரைந்து,

32 வில்லறம் மிக்க இராமன் விளங்குதமிழ்ச்
சொல்லறம் மிக்கநம் வள்ளுவனாய் — இல்லறம்
மேலாசை வைத்தவர்கள் மேலோங்கி வாழஉன்
பாலாசை வைத்துள்ளேன் பார்.

33 பாராண்டு காத்துவரும் அஞ்சாத செங்கமலம்
ஊராண்டு வாழ்வாரின் உள்ளத்தை - நேராண்டு
தன்வசம் அன்பும் தமிழ்ப்பண்பும் தாம்பெறவே
உன்வசம் சேர்ப்பாய் உணர்ந்து.

34 உணரா தவரை உணரவைக்கும் தாயே
இணரூழ்த்தும் நாறு மலராய்ப் — புணர்வாரை
எண்ணி அவர்வாழ இறைஞ்சுகிறேன் உன்னுடைய
கண்ணில் கருணைமழை காட்டு.

35 காட்டுமான் போலோட்டம் காட்டுவான் தன்னையே
மாட்டுவாள் செங்கமல மங்கையே — நாட்டமுடன்
ஈதான் தருகின்ற இன்சுவைத்தேன் பூங்கனியாய்
நீதான் அருள்வாய் நெறி.

36 நெறியில்லா வாழ்வாலே நீசமுற்ருர் மெய்யைச்
சரிசெய்யும் தாயாம் மருத்துவராய்த் தாரணியில்
பார்புகழ வாழ்வார்போல் பாசமுடன் நேசமுடன்
பார்மகளே எங்களையும் பார்.

37 பாராக் குருடர்க்கோ பார்க்கும் விழியாவாள்
ஊருத கேணிக்கும் ஊற்ருகி நாற்ருவாள்
நோய்க்கு மருந்தாவாள் வாய்க்கு விருந்தாவாள்
தாயாம் தமிழ்அவள் பாடு.

38 பாடல் பணிபுரிவார் பாவலர்கள் பைந்தமிழின்
ஆடல் பணிபுரிவார் ஆவலுடன் — கூடலுடன்
ஆர்க்கும் கடல்முத்தாய் ஆர்க்கும் நலம்செய்து
பார்க்கும் பணியே பணி.

39 பணிசெய்து தாம்கிடந்தார் பண்பான அப்பர்
கனிகொய்து நிற்கும் அணிலாய் — அணிசெய்(து)
அடியாரைப் போற்றும் அறம்தாராய் உன்றன்
அடியாரைக் காப்பாய் அறிந்து.

40 அறிவால் தெளிவும் தெளிவால் பொலிவும்
செறிவால் வலிவும் சிறப்பாய் — விரிவாகி
எங்கும்நான் பேர்பெறவும் ஏற்றவான் சீர்பெறவும்
செங்கமலம் என்பேன் தினம்

41 தினந்தோறும் மக்கள் மனம்தேறும் வண்ணம்
தனம்சேரும் எண்ணம் தழைப்போர் - முனம்தருவாள்
எவ்வொன்று கேட்டாலும் இல்லைஎன்று சொல்லாமல்
ஒவ்வொன்ருய் யார்க்கும் உதவு.

42 உதவியவர் அன்பால் உதவி செயப்பட்டார்
பதவியவர் பண்பால் பழகும் — அழகுதமிழ்
ஏடாளச் செல்லும் இளைய தலைமுறையின்
நாடாளச் செய்வாஅய் நன்று.

43 நன்றியில்லார் நற்கல்வி தானுமில்லார் தாயரொடும்
ஒன்றி நில்லார்ஓயாமல்உண்டுவாழ்வார் - நின்றிலங்கும்
தாழ்வெல்லாம் நீக்கு(ம்) தமிழ்த்தாயே இவர்களின்
வாழ்வுயரத் தாராய் வரம்.

44 வரம்பெற்ற ராவணன் வாஞர்ந்த தம்பி
சிரம்அற்றுப் போனகதை தேர்ந்தோம் — கரம்பெற்ற
வாளைச் சுழற்ருமல் வாழ்வுதரும் செங்கமலம்
தாளை வணங்குவதே சால்பு.

45 சால்பிற்குக் கட்டளை யாதெனில் வள்ளுவரோ
தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்என்பான்
காலிரண்டும் கண்ணிரண்டும் காட்சிநடை ஒன்றேபோல்
நாவிரண்டும் ஈவாள்நம் தாய்.

46 தாயாவாள் தந்தை உடனுவாள் தண்டமிழ்ச்சொல்
வாயாவாள் வாழ்க்கைத் துணையாவாள் — சேயாவாள்
வில்லாவாள் அம்பாவாள் வேண்டுவார்க்கு மூண்டருளும்
எல்லாம் அவள்என்(று) இரு.

47 இருப்பாவாள் துன்பச் செலவாவாள் இன்பம்
விருப்பாகும் வண்ணம் வரவின் பொருப்பாவஃாள்
முப்போகம் தஞ்சைஎன முன்னம் வளமெல்லாம்
தப்பாமல் ஈவாள் தரம்.

48 தரம்மிக்க தங்கம்போல் சங்கத் தமிழின்
திறம்மிக்கார் யாரும் திகைக்க — வரம்தாராய்
சொல்லுண்ட கம்பனுய்ச் சொல்லோ வியம்தீட்டக்
கல்லும்சொல் லாதோ கவி.

49 கல்லின் உயிர்நல்கப் பெற்றானும், அற்புதமாய்ச்
சொல்லின் உயிர்நல்கக் கற்றானும் – நெல்லின்
தனம்சாலக் கொள்வானும் செங்கமலத் தாயால்
மனம்போல் பெறுவான் மகன்.

50 மங்கை எழிலென்கோ மன்னர் தொழிலென்கோ
செங்கை அறம்என்கோ சேயிழைஉன் – கொங்கையிலே
பூப்பான பாலுண்டு பாப்பாடி நின்றானுய்க்
காப்பதே உன்றன் கடன்.

51 'கடன்என்ப நல்லவை எல்லாம்' குறளின்
திடமான தெய்வமித் தேரை — வடம்பற்றி
நன்மை திரட்சிபெற நாமவளைப் போற்றிடுவோம்
வெண்மைப் புரட்சிக்கு வித்து.

52 வித்துள் மறைந்திருக்கும் மாபெரும் ஆலமரம்
முத்துள் நிறைந்திருக்கும் மூத்தவிலை — மத்தின்
முனைவால் தயிரங்கு மோர்நெய்ஆ தல்போல்
நினைவைச் செயலாக்கு நீ.

53 நீங்காமை வேண்டும் நினைவு நிறைவுவரை
தூங்காமை வேண்டும் துணிவுடைமை — பாங்காய்ப்
பசுநெய் மணம்தரும் பாவையினைப் போற்றிப்
பசுமைப் புரட்சியினைப் பார்.

54 பாடம் பயிற்றப் பணிந்து பயில்வார்கள்
ஓடம் கரைசேர்தல் உண்மைபோல் — பீடம்
மறக்காமல் வாழ்விக்கும் செங்கமல மங்கை
பிறக்காமல் செய்பவளாம் பின்.

55 பிட்டுக்கு மண்சுமந்த பெம்மான் பெருந்தேவி
மட்டுவார் கூந்தல் வடிவழகி — கொட்டுவார்
ஆடும் திருவிளை யாடலால் நான்மகிழ்ந்து
பாடும்என் பாடலையும் பாடு.

56 பாட்டரங்கம் பாவலர்க்காம் பண்பரங்கம் நண்பர்க்காம்
நாட்டரங்கம் நாவலர்க்காம் நல்லமனே — வீட்டரங்கம்
கூட்டரங்கம் செங்கமலம் கோயிலெனச் சுற்றிவந்தால்
கேட்டரங்கம் ஈவாள் கிளர்ந்து.

57 கிளர்ச்சியெனும் தூண்டிலிட்டுக் கேடு மீன்பிடிப்பார்
வளர்ச்சிதனைக் காணுமல் வாட்டும் — தளர்ச்சிதரும்
ஆணவம் நீக்கும்நல் ஆசானைத் தாம்போற்றும்
மாணவரைக் காப்பாய் மகிழ்ந்து.

58 மதிக்கின்ற மாணிக்கம் மல்லல்மா ஞாலம்
துதிக்கின்ற செங்கமலம் தூய்மை — உதிக்கின்ற
செங்கதிராய்ச் சித்திரைத் தேனிலவாய்ப் பொங்கிவந்து
எங்கள் குறைதீர்ப்பாய் இன்று,

59 இன்றுவரை எந்நாடும் போற்றும் சிவனவனே
அன்று மார்க்கண்டனவன் ஆருயிரைத்தான் காத்தான்
நாட்கொண்ட பக்தியினுல் நாயகன்போல் தாயேநீ
ஆட்கொண்டு நின்ருல் அறம்.

60 அம்மையே அப்பா ஒப்பில்லா நன்மணியே
செம்மையே கல்வித் திருவான பெண்மையே
மண்கண்ட விண்கண்ட மாருத இன்பமெலாம்
கண்கண்ட தெய்வமே காட்டு.

61 காட்டா தனஎல்லாம் காட்டுகின்ற பேரழகி
ஊட்டா தனஎல்லாம் ஊட்டும் பெருந்தாயே
வாட்டாது வாழவைப்பாய் வாழ்வரசி! மேலாம்என்
பாட்டுக்குத் தாராய் பரிசு.

62 பரிசால் பழகும் அழகுதமிழ்ப் பண்பால்
வரிசையுற்று வாழ்வாங்கு வாழ்ந்துவரப் பாராய்
வரம்எய்த வாராய் வளர்இன்பம் சேராய்
அறம்செய்து வாழ்தல் அறிவு.

63 அருமைத் தவமுடையார்க்கு அன்றி அவரின்
பெருமையினைக் காக்கும்அடி யார்க்கும் – ஒருமையினை
ஏற்றலால் செங்கமலம் எண்மையாய்த்தான்அருளும்
ஆற்றலைப் போற்றல் அறம்.

64 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்' என்றகுறள்
போற்றுவார் ஏற்கும் புனிதநிலை — மாற்றுயர்ந்த
நல்லறமாம் தங்கத்தில் நண்ணுகின்ற வைரமென
இல்லறமாய் வாழ்தல் இனிது.

65 இன்பம் விழையாமல் என்றும் பிறவுயிரின்
துன்பம் துடைத்தூன்றும் தூண்ஆகும் ஆண்மகனை
வாகையுடன் வாழவைக்கும் வாழ்வரசி செங்கமலம்
ஈகைதான் மாந்தர்க்கு இசை.

66 இன்னே வருபவளாம் இன்பம் தருபவளாம்
முன்னே வருபவளாம் முத்தம் தருபவளாம்
பெண்மையாம் செங்கமலப் பேராண்மை போற்றும்
உண்மை உணர்வே உணர்வு.

67 உலைவைக்கும் பெண்கள் கலைதைக்கும் கண்ணால்
தலைவைத்துப் போற்றும் தமிழ்த்தாய் சிலைவைத்துப்
பார்க்கும் பலவான் குடிவாழ்வார் காப்பவளாம்
ஊக்கம்தான் காக்கும் உயர்ந்து.

68 ஊரணிந்த மக்கள் உயர்வாழ்வு தாம்வேண்டித்
தேரணிந்து காணும் திருவிழா — நேரம்
வலிமை தருவாளை வாழ்த்துவதில் கூட
எளிமையுடன் வாழ்தல் எழில்.

69 எழில்தான் இயற்கை எனினும் செயற்கைத்
தொழில்தான் நமக்கென்றும் சோறளிக்கும்–ஆதலால்.
வாழைபோல் தாழைபோல் வாழ்வாங்கு வாழ்ந்தால்
ஏழைக்(கு) இரங்கும் இறை.

70 இறைஉணர்வே என்றும் நிறைஉணர்வாம் ஏற்ற
பொறைஉணர்வேவாழ்வின்முறைஉணர்வாம்செங்கமலம்
வையமொன்றிக் காப்பாள் வருமோ குறைஉணர்வு
ஐயமின்றி வாழ்ந்தால் அறம்.

71 அறந்தான் மறந்து(ம்) பிறன்கேடு சூழாமை
திறந்தான் செயற்கரிய செய்தல் — உரம்தான்
விழுப்பமிகு கல்வி வியன்செல்வம் மெய்யாம்
ஒழுக்கமே வாழ்வின் உயிர்.

72 உயிர்வாழ என்றும் உடல்வாழ வேண்டும்
பயிர்வாழ வேண்டும் பனிவான் — வயிருரக்
கூடி நலமெல்லாம் கூட்டுவாள் ஆலயத்தில்
ஓடிவிளை யாடிவர ஓடு.

73 ஓங்காரப் பெண்ணுப் உலகனைத்தின் கண்ணுகி
ஆங்காரம் நீங்குமனப் பூந்தேனில் — ரீங்காரம
செவ்வையுறும்பொன்வண்டாம்செங்கமலம்தான்படைக்கும்
ஒளவையின் சொல்லாம் அவள்.

74 அவன்தான் மனிதன் ஆயிரத்தில் ஒருவன்
சிவன்தானே செங்கமலம் என்பான் குகனுகி
எஃகாகிப் பக்தியினுல் சக்திபெற வேண்டுகிறேன்
அஃகாத செல்வம் அருள்.

75 அழுகின்ருர் பால்தருவாய் அன்புமனம் வேண்டித்
தொழுகின்ருர் தோள்தருவாய் தோன்றி — எழுகின்ருர்
காய்க்கும் மரமாகிக் காதல் உரமாகித்
தாய்க்கும் உயர்ந்தவளே தாங்கு.

76 தாங்கும் சுமைதாங்கி தன்மானப் பொன்மகளே
ஓங்கும் உமையவளே உன்னைத்தான் நம்புகிறேன்
நெஞ்சிலோர் ஆலயமாய் நிற்பவளே கற்பகமாகக்
கஞ்சியுடன் விஞ்சியருள் காசு.

77 காசியில் காஞ்சியில் மாமதுரை நெல்லையில்
பேசிடும் பெண்மைப் பெருந்தெய்வம் — வீசிடும்
கையுணர்வு தந்தெம்மைக் காத்திடும் செங்கமலம்
மெய்யுணர்வு தாராய் மிகுந்து.

78 மிகுந்த மரியாதை மேவுகின்ற பேதை
தகுந்த மனைவியாய்த் தாராய் — புகுந்திடும்
தும்பிக்கை உண்டேதுணை என்றேன் நன்மக்கள்
நம்பிக்கை தாராய் நயந்து.

79 நல்லாடு மாடு நயமான தாய்ப்பாலும்
சொல்லோ(டு) அறம் பொருள் இன்பமுப் பால்வீடும்
நூலோடும் பாவலராய் வேலாடும் செங்கமலம்
பாலோடும் தாராய் பழம்.

80 பாலில் தயிர்சேரும் பாட்டில் உயிர்சேரும்
காலில் சதங்கைசேர் காவிரியே — நூலில்
புவியெல்லாம் சேருகின்ற புண்ணியத்தால் என்றன்
செவியில் கவியுணர்வு சேர்.

81 சேரிடம் சேரவைப்பாய் செல்வமெலாம் நேரவைப்பாய்
நீரிடம் செல்லும் படகாய்இப் — பாரிடம்
தஞ்சை இளநாற்ருய்த் தமிழ்த்தென்றல் காற்ருய்என்
நெஞ்சகத்து வாழ்வாய் நிறைந்து.

82 நின்ற கதிர்மதியும் நில்லாத கங்கையும்
தென்றலும் ஆழியும் சேர்ந்துலகம் — நன்ருய்த்
தழைக்கத் துணையாகும் செங்கமலத் தாயே
உழைக்கின்ற கைதான் உயர்வு.

83 உற்றவர் மற்றவர் உள்ளாதார் இல்லாதார்
கற்றவர் கல்லாதார் பிள்ளைகள் — பெற்றவர்
சுற்றம் முதலாளி தொண்டின் தொழிலாளி
ஒற்றுமை ஈவாள் உயர்ந்து.

84 உளம்தரும் உண்ணீர்க் குளம்தரும் வண்மை
வளம்தரும் வாய்மை நலம்தரும் — வாழ்வாங்கு
மங்கலமாய் வாழ வழிதரும் நன்கலமாய்ச்
செங்கமலக் கண்கள் சிறந்து.

85 சிலையழகுச் செம்பொருளாம் செங்கமலம் காணக்
கலைமகளும் கண்ணன் அலைமகளும் முன்னம்
மலைமகளும் வந்து மகிழ்வர் வணங்கும்
தலைமகளே காப்பாள் தழைத்து.

86 தழைப்பவர் நெஞ்சம் தமிழ்க்கடலாம் அன்பால்
அழைப்பவர் நெஞ்சம் அருட்சுடராம் செங்கமலம்
வில்லாண்ட சேரமன்னர் வீரமென ஈரமுடன்
சொல்லாண்டு காப்பாள் துணிந்து.

87 துணியும் மணியும் துணிவும் பணிவும்
அணியும் நிலையில் அருள்வாய் — கனிவாஅய்
வெல்வாய் எனச்சொல்லும் செங்கமலம் கோவிலுக்குச்
செல்வா விரைந்துநீ செல்.

88 செல்லாத காசையும் செல்லவைக்கும் செல்வியவள்
கல்லாத பேர்களும் கற்கண்டாம் சொற்கொண்டு
கம்பர் இளங்கோ கவின்திரு வள்ளுவரின்
உம்பராய்ப் போற்றும் உலகு.

89 உலகின் ஒளியாய் ஒளியின் வழியாய்
நிலவும் ஒருபொருளாய் நெஞ்சில் — உலவுகின்ற
நன்ருன செங்கமல நாயகியே காத்தருள
ஒன்ருக வாராய் உயர்ந்து.

90 ஒழுக்கமும் கல்வியும் காவிரி கங்கை
விழுப்பமெனத் தாராய் விரைந்து — நயந்து
திரண்டிங்கு நானுயரச் செங்கமலத் தாயே
இரண்டையும் தாராய் இணைந்து.

91 இம்மை மறுமையுடன் ஏற்றமிகு மும்மையும்
செம்மையுடன் சேராய் சிறந்து பிறந்தபயன்
ஈன்ருர்கள் போற்றும் அறம் பொருள் இன்பமாம்
மூன்றையும் தாராய் முனைந்து.

92 மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தமெனப் போற்றுவதும்
காத்தவர்பால் செய்ந்நன்றி காட்டுவதும் ஏத்துகின்ற
வானுர் விருந்தோம்பித் தானமும் செய்தருளும்
நான்கையும் தாராய் நயந்து.

93 நகையீகை இன்சொல் இகழாமை கல்வி
வகையாக வள்ளுவன் வாழ்வாங்கு வாழ்ந்துவர
மைந்தர்க்குச்சொன்னவெலாம்எந்தனுக்கும் செங்கமலம்
ஐந்தையும் தாராய் அறிந்து.

94 ஐம்புலனும் கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும்
செம்புலனும் ஆறறிவாம் நன்மனமும்–பொன்னலமாய்
ஆருய்ப் பயன்பெறவே அன்னையே! சீராக
ஆறையும் தாராய் அமைந்து.

95 அன்பேஎன் ஆருயிரே ஆதிபரா சக்தியே!
இன்பே அருளே இயற்கைப் பெரும்பொருளே
ஏழு கிழமையிலும் இன்புற்று நான்வாழ
ஏழாக வாராய் எழுந்து.

96 எண்குணம் மிக்கவளே என்மனம் புக்கவளே
சண்முகம் ஈன்றவளே தாயான செங்கமலம்
சிட்டுக் குருவியெனத் தொட்டுப் பறந்துவர
எட்டிசையும் தாராய் எனக்கு.

97 எங்கும் இருப்பவளே என்றன் வழித்துணையே
கங்குல் பகலாய்க் கண்பார்த்தருள்வாய் -பொங்குமொளி
தன்பால் அணியாய்த் தரமிக்கு தான்விளங்கும்
ஒன்பான் மணியருள் உயர்ந்து.

98 ஒளியாகி மக்கள் ஒலியாகி மூச்சின்
வளியாகி வாழும் வழியாகி நிற்பவளே
முத்தாகி நல்லவர்தம் சொத்தாகிக் கைவிரலாம்
பத்தாகிச் சேர்வாய் பரிந்து.

99 பரிந்துஅவள் உடல்அமிழ்தம் பெற்றஅதனுல் கற்ருேர்
தெரிந்துரைக்கும்ஊர் நாட்டம்தேர்ந்தஐயா - லெட்சுமணர்
நின்றதேர் ஓட்டம் நிகழ்ந்துவரத் தாம்செய்தார்
குன்ரு முயற்சிமேற் கொண்டு.

100 கொண்டாடும்செங்கனிவாய் அச்சகத்தைத்தோற்றியவர்
உண்டாம் அகரமுதல் உற்றறியா ராமசாமி
செம்மைப் புலவரெனச் செந்தமிழ்ப்பா பாடவைத்த
அம்மை யருளே அருள்.

101 அருட்கோயில் செங்கமலம் ஆதவன் திங்கள்
இருட்கோயில் மாற்றுமிரு கண்ணும் — பொருட்பால்
சிகரமாய் இன்புஅறம் சேர்ந்தநல் வீட்டார்
அகரமாய் வாழ்வாள் அகம்.

‘நாற்பயன்’

1 சங்கத் தமிழ்காக்கும் தங்கள் இனம்காக்கும்
செங்கமல அம்மனருள் செந்தமிழ் அந்தாதியென
வெண்பாப் புகழேந்தி வேலப்பன் ஆகிவந்து
பண்பாடும் பாமாலை பாடு.

2 பாடுவார் முத்தப்பர் பாடல் அறம்சாலப்
பாடுவான் வேலப்பன் பாமாலை அன்னைக்குச்
சூடுவார் இன்பம் துணிவுடைமை வெற்றிஎலாம்
கூடுவார் முன்னம் குளிர்ந்து.

3 குளிர்ந்த இதயத்தால் கோபுரத்துள் வாழ்வாள்
குளிர்ந்தருளச் சந்தனத்தால் குங்குமத்தால் பன்னீரால்
நன்றாம் நினைவுமலர் ஒன்றாகச் சூடுபவர்
என்றும் உயர்வதால் எண்ணு.

4 எண்வெள்ளிசெவ்வாயில்எண்ணமொன்றிப்பாடுபவர்
எண்ணிரண்டு பேறுகளால் இன்புற்றே வாழ்ந்திடுவர்
திங்களுடன் ஞாயிறென மங்கையரும் ஆடவரும்
மங்கலமாய் வாழ்வர் மகிழ்ந்து.

5 மகிழ்ந்து நெகிழ்விக்கும் மங்கையர்கள் போற்றிப்
புகழ்ந்திடும் சீதையும் பொங்குதமிழ்க் கண்ணகியும்
மாரியம்மன்காளியம்மன் மங்கலமாம் செங்கமலம்
நேரொன்றாய் எண்ணிடுவீர் நீர்.

6 நீரும் நெருப்புமாய் நெல்லும் உயிருமாய்ச்
சீரும் சிறப்புமாய்த் தெருவெல்லாம் – சேருதற்குச்
சொல்லில் இல்லொன்றுஅய்த் தோன்றும் இராமனுப்ப்
பல்லாண்டு காப்பவனைப் பாடு.

7 பாடுவார் கூடுவார் பக்கபலம் மிக்கநலம்
நாடுவார் சூடுவார் நாமாலை பூமாலை
ஆடுவார் ஐம்பொன் அரங்கனவன் செங்கமலம்
தேடுவார் காண்பார் திரு.

'வாழ்த்து'

8 பல்லோரும் போற்றும் பலவான் குடிவாழும்
நல்லதமிழ் வேலப்பன் நாமலரும் செங்கமலம்
கல்லாரே யானலும் கண்பார்த்தால் கைகொடுப்பாள்
எல்லாரும் வாழ்க இனிது.

'செய்ந்நன்றியறிதல்'

9 அந்தாதி பாடவைத்த ஐயா –"அணிந்துரை"
அந்தமில் இன்பம். "அறிமுகம் நல்லுரை".
தந்த பெருங்கவிஞர் தண்டமிழ் முதல்வர்க்கும்
செந்தமிழேன் நன்றி சிறந்து.

சிவமயம்

ஸ்ரீ செங்கமல அம்மன்

மலர் வழிபாடு 108 போற்றிகள்


1 அஞ்சாத செங்கமல அன்னையே போற்றி
2 ஆசைகள் நிறைவேற்றும் நாயகியே ,,
3 இல்லறம் தந்தருளும் எந்தையே ,,
4 ஈடிலாக் கல்விதரும் குருவும்நீ ,,
5 உலகாளும் அன்பு அறிவின் ஆற்றல்நீ ,,
6 ஊருணியாய் உயிர்காக்கும் உத்தமிநீ ,,
7 எழிலோடு தொழில்வளம் ஏற்றுவாய் ,,
8 ஏழையரை வாழை எனக்காத்திடுவாய் ,,
9 ஐந்துகரன் ஆனைமுகன் அம்மையே ,,
10 ஒழுங்கு அறம் பொருள் இன்பம் வீடு அருள்வாய் ,,
11 ஓடிவந்து காப்பாற்றும் ஓங்காரி ,,
12 ஔவைக்கும் மூன்றுதமிழ் ஈன்றவளே ,,
13 அஃகாமை வெஃகாமை எஃகருள்வாய் ,,
14 கடவுளாய்ச் சிவனோடு கலந்தவளே ,,
15 காக்கை எனச் சுற்றத்தைக் காப்பவளே ,,
16 கிளிபோலும் பழம்நாடும் பண்பருள்வாய் ,,
17 கீர்த்திசேர் மாற்றூரின் பெரியநாயகியே ,,
18 குன்றக்குடி வீரமா காளியம்மன் ,,
19 கூட்டுறவை வீட்டினிலே கூட்டுவாய் ,,
20 கெடுதலை அறியாத மனமருள்வாய் ,,
21 சேண்மைதரு செல்லாயி அம்மன் அருள் ,,

22 கையோடு கால்நடைகள் காத்திடுவாய் போற்றி
23 கொப்புடையாள் காரைக்குடிக் கோமகளே ,,
24 கோட்டையம்மன் தேவகோட்டைக் குலமகளே ,,
25 கௌதமராய் ஞானதீபம் ஏற்றுவாய் ,,
26 நப்போலும் நேமங்கோயில் சௌந்தரநாயகியே ,,
27 சங்கத்தமிழ் சிநேகவல்லி தந்தருள்வாய் ,,
28 சார்ந்தருளும் திருநெல்லை சாமுண்டி ஈஸ்வரி ,,
29 சிரித்தருளும் இரணியூர் சிவபுரம் தேவி ,,
30 சீர் பிள்ளையார்பட்டிச் சிவகாம வல்லி ,,
31 சுதந்திரம் சுகம்தரும் சுந்தரியே ,,
32 சூரைக்குடி ஆவுடைய நாயகியே ,,
33 செந்தமிழ் அந்தாதிச் செங்கமலம் ,,
34 சேரிடம் அறிந்தெம்மைச் சேரவைப்பாய் ,,
35 சைகோன் சண்முக வேலர் தாயானாய் ,,
36 சொல்லாலே வெல்ல வைக்கும் சொல்லருள்வாய் ,,
37 சோம்பலின்றி வாழ்ந்துயரும் வரமருள்வாய் ,,
38 சௌபாக்கியம் பதினாறும் தந்தருள்வாய் ,,
39 ஞமலி பெரியகருப்பருடன் பலிபீடத்தாய் ,,
40 தவம் போற்றும் சிவமாகச் செய்தருள்வாய் ,,
41 தாளாண்மை வேளாண்மை தரும்குமரி ,,
42 திருக்குறளாய் உலகில் எனைத்திகழவைப்பாய் ,,
43 தீங்கனிச் சிறுர்வயலின் திரிலோக நாயகி ,,
44 துணிவோடும் பணிவோடும் கனிவு அருள்வாய் ,,
45 தூயபெரும் பதவிக்குத் துணையாவாய் ,,

46 தெய்வமகன் இளங்கோவின் சிலம்பணிவாய் போற்றி
47 தேரோட்டம் சித்திரையில் காண்பவளே ,,
48 தைத்திங்கள் நெய்ப்பொங்கல் அமுதமே ,,
49 தொல்லாணைக் காப்பியனாய் எனைக்காப்பாய் ,,
50 தோன்றுபுகழ்க் கம்பனைப்போல் தோன்றவைப்பாய் ,,
51 தௌவரைவெல் இலுப்பைக்குடி சவுந்தர நாயகி ,,
52 நகரத்தார் நாட்டார் நலமருள்வாய் ,,
53 நாயினும் செய்ந்நன்றி அறியவைப்பாய் ,,
54 நினைவெல்லாம் உன்நினைவே நிறையவைப்பாய் ,,
55 நீண்டஇளை யாற்றங்குடி நித்தியகல்யாணி ,,
56 நுண்ணறிவால் நுனிவரைக்கும் செல்லவைப்பாய் ,,
57 நூற்றுக்கு நூறுஆற்றல் அருள்தாயே ,,
58 நெஞ்சிலோர் ஆலயமாய் நின்றருள்வாய் ,,
59 நேசங்கொண்ட மார்க்கண்டன் பாசமலர் ,,
60 நைடதமாம் புலவர்களின் ஔடதமே ,,
61 தொடிப்பொழுதில் செவியின்பம் நுகரவைப்பாய் ,,
62 நோக்கரிய நோக்கமுடன் வாழவைப்பாய் ,,
63 நௌவைவிழிக் கருணையினால் செவ்வையருள் ,,
64 பலவான்குடி அமர்ந்துவளர் பைங்கொடியே ,,
65 பாவமின்றிக் கோபமின்றிப் பார்த்தருள்வாய் ,,
66 பிழைநீங்கிப் பிறவிக்கடல் நீந்துவிப்பாய் ,,
67 பீர்க்கம்பூ மஞ்சள்நிற மாதா நீ ,,
68 புவனமெலாம் காத்தருளும் புவனேஸ்வரி ,,
69 பூசும் திருநீற்றின் பொன்மகளே ,,

70 பெருமையாக மனைவியுடன் வாழவைப்பாய் போற்றி
71 பேசுகின்ற தெய்வம்நீ அருள்புரிவாய் ,,
72 பைந்தமிழ்ப் புலவரெனைப் பாடவைத்தாய் ,,
73 பொங்கிவரும் கங்கைஎனப் பாவிரிப்பாய் ,,
74 போற்றுமெழிற் காவிரிபோல் நாவிரிப்பாய் ,,
75 பௌவியமாய்த் திவ்வியமாய்ப் பழகவைப்பாய் ,,
76 மருதீசர் பிள்ளையார்பட்டி வாடாமலர் மங்கை ,,
77 மாடுமனை வீடுமக்கள் மாங்கல்யம் அருள்வாய் ,,
78 மின்னும்பொன் மணியணிகள் கதிர்மதியாய் அருள் ,,
79 மீனாட்சி சுந்தரேசர் தேனாட்சியம்மன் ,,
80 முன்னோடிக் கருப்பனாய் முறையருள்வாய் ,,
81 மூண்டநீர்ச் செங்கனிவாய் ஆண்டருள்வாய் ,,
82 மெத்தையிலே நித்திரைசெய் மேன்மையருள் ,,
83 மேலான பாலோடு பழமருள்வாய் ,,
84 மைவிழியில் மெய்வழியச் செய்பவளே ,,
85 மொட்டெல்லாம் மலராக்கும் மொய்குழலே ,,
86 மோப்பக் குழையுமுன்றன் அனிச்சமலரடி ,,
87 மௌரியரின் பேரரசுக் கௌரியே ,,
88 யவனர்க்கும் வெற்றிதந்த கொற்றவையே ,,
89 யா முத்துப்பட்டணத்தின்லோக நாயகி ,,
90 யிலங்குநூல் வேலப்பன் வழங்குதமிழ் ,,
91 யீரைந்து பருவத்தும் எழில்தருவாய் ,,
92 யு சிறுவயல் கண்ணழகி பொன்னழகி ,,
93 யூகமுள்ள மேக சின்னக்கறுப்பன்தாய் ,,

94 யெடையெங்கும் திறைபொருளின் வணிகத்தாய் ,,
95 யேடேற்றும் செங்கமலக் குங்குமமே ,,
96 யைந்துபொறி நெறிகாக்கும் பைங்கொடியே ,,
97 யொற்றுமையாய் முத்துமாரி வாழவைப்பாய் ,,
98 யோகமுடன் போகமுடன் சூழவைப்பாய் ,,
99 யெளவனமாய் இன்பமுடன் வாழவைப்பாய் ,,
100 வயிரவன் கோயில் வடிவுடை யம்மை ,,
101 வானுட்சித் தமிழ்மதுரை மீனுட்சி யம்மை ,,
102 விஞ்சுபுகழ்க் காஞ்சிநகர்க் காமாட்சி ,,
103 வீற்றிருக்கும் திருக்கடவூர் அபிராமி ,,
104 வுளம்காதல் மாதரசி காசி விசாலாட்சி ,,
105 வூர்வேலித் திருநெல்லின் சீர்காந்திமதி ,,
106 வெண்கோயிற் பட்டியம்மன் செண்பகவல்லி ,,
107 வேலங்குடிக் கோயில் காமாட்சி யம்மை ,,
108 வையமெலாம் வாழ்விக்கும் செங்கமலம் ,,
வானுர்ந்த திருவடிகள் போற்றி! போற்றி!!



வாழ்த்து

வாழ்க உலகெலாம்! வாழ்க உயிரெலாம்

வாழ்க திருநீற்றில் வாழும் திலகமே!

வாழ்க உயர் மீ. சு.!
வாழ்க அழகம்மை!

வாழ்க கதிரேசர்!
வாழ்க கணேசரும்

வாழ்க நம் செங்கமலம்
வந்தருளும் குங்குமத்தால்

வாழ்க வேலப்பன் வளர்ந்து.

பலவான்குடிப் புலவர்

வே. வேலப்பன்,


பி. ஓ. எல்., பி. டி., பி. லிட்., எம். ஏ.,

(தமிழ் & ஆங்கிலம்)



இந்நூலாசிரியரின் பிற நன்னூல்கள்:-

1. இருநூறு வரிகளில் திருமுருகன்.
2. முருகன் பாமாலை இருபது.
3. வெண்பாவில் வேலப்பன்.
4. செந்தமிழ் அந்தாதி.
5. குறளோ குறள்.
6. மனை விளக்கு.
7. வாழ்த்துங்கள்.



"வழிபட்டு வாழ்வோம் வளர்ந்து".

அருள்வழங்கும் செங்கமல அன்னையவள் கோயில்
பொருள்வழங்கிச் சாமியாடிச் செட்டி அழகப்பர்
விழிதொட்டுக் கட்டிவைத்தார். வேண்டிநாம் சென்று
வழிபட்டு வாழ்வோம் வளர்ந்து.